**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18 ம் நாள் புதன்கிழமை**

**E.A.No. 04/2026 in E.P.No. 10/2024 in O.S.No. 175/2015**

1. ஆனையப்பன்
2. பாலகிருஷ்ணன் ... மனுதாரர்கள்/6,7 எதிர்மனுதாரர்கள்

**//எதிராக//**

1. பிச்சை (இறப்பு)
2. பழனியம்மாள்
3. மணிமேகலை
4. ராக்கேஷ்சர்மா
5. யோகப்பிரியா ... 1 ம் எதிர்மனுதாரர்/ 1 ம் பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 13.02.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.மணிவேல் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

6,7 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 25.07.2025 ம் தேதி ஏற்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 106–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் நிறைவேற்று மனுவின் 7 ம் எதிர்மனுதாரர். இம்மனுவை தனக்காகவும், 6 ம் எதிர்மனுதாரர்காகவும் தாக்கல் செய்துள்ளார். இம்மனுவில் ஆஜரான பின்னிட்டு தனது கூலி வேலைக்காக வெளியூர் சென்று தங்கி விட்டார். இதனால் 25.07.2025 அன்று இவ்வழக்கில் ஆஜராக இயலவில்லை. அதன் காரணமாக தனக்கு எதிராகவும், 6 ம் எதிர்மனுதாரருக்கு எதிராகவும் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், இம்மனுவுடன் தங்களது எதிருரையை

தாக்கல் செய்திருப்பதாகவும் எனவே தங்களுக்கு எதிராக 25.07.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யக்கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து மற்ற எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்</u>**

2) இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. மனு பத்தி 1,2 ல் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானதாகும். இம்மனு சொத்துக்கள் குறித்து 20.11.2022 ல் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பித்த விபரம் மனுதாரர்களுக்கு நன்கு தெரியும். மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையில் எவ்வித மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே இந்த நிறைவேற்றுகை மனுவை தடை செய்ய மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. இந்த நிறைவேற்றுகை மனுவானது சுவாதீன மீட்புக்காக தாக்கல் செய்து 04.11.2025 ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

3) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் சொந்த வேலையின் காரணமாக வெளியூர் சென்று விட்டதால் இந்த நிறைவேற்றுகை மனுவில் ஆஜராக இயலவில்லை என்றும் இதனால் தங்களுக்கு எதிராக ஒரு தலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அதனை ரத்து செய்ய வேண்டுமென வாதிட்டனர். இம்மனுவானது சுவாதீன மீட்புக்காக தாக்கல் செய்யப்பட்டு அதில் எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாததால் 25.07.2025 அன்று இந்த மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

5) பின்னிட்டு மற்ற எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிருரையின் அடிப்படையில் இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டு இம்மனுவில் சுவாதீனம் மீட்புக்காக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி மனுவுடன் தங்களது எதிருரையை தாக்கல் செய்திருப்பதாக மனுவில்

கூறியுள்ளனர். மேற்படி எதிருரையை பரிசீலனை செய்கையில், எந்த ஒரு மேல்முறையீடும் நிலுவையில் இருப்பதாக மேற்படி எதிருரையில் குறிப்பிட்டு கூறவில்லை.

6) இந்நிலையில் மனுச்சொத்துக்கள் குறித்து ஏற்கனவே இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை மனுதாரர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். மேலும் எதிர்மனுதாரர்களுடன் சமாதானம் பேசி இருப்பதாகவும் அதை மறைத்து மனுதாரர்கள் இந்த நிறைவேற்றுகை மனுவை தாக்கல் செய்திருப்பதாகவும் கூறியுள்ளனர். ஆனால் மனுதாரர்கள் இதனை கூறி நிறைவேற்றுகை மனுவில் ஆஜராகவில்லை. மேலும் இம்மனுவை அனுமதிப்பதால் இந்த நிறைவேற்று மனு மேலும் காலதாமதப்படுத்தப்படும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மனுதாரர்கள் மேல்முறையீடு தாக்கல் செய்திருப்பதாகவும், தடை உத்தரவு பெற்றிருப்பதாகவும் எந்த ஒரு உத்தரவும் இம்மனுவுடன் தாக்கல் செய்யாமல் இருப்பதால் இம்மனுவை அனுமதிக்க எவ்வித முகாந்திரமும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,**

இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

<u>**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u> –இல்லை–
<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u> –இல்லை–

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**************************************
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**E.A.No. 04/2026**
**in**
**E.P.No. 10/2024**
**in**
**O.S.No. 175/2015**

**DRAFT / FAIR ORDER**

**D.D.18.02.2026**
**************************************